வளன்ஆயம் நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# பெண்கவிஞர்கள் காட்டும் பெண்ணிய வெளிப்பாடுகள்

**திருமிகு ஆ. அடைக்கலராஜ்,** தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 02.

மின்னஞ்சல் முகவரி – rajadaikkalam@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:**

உடலால் பெண் என அறியப்படுபவர் எல்லோரும் தம்மை தம்முடைய நிலையையும் அதன் காரணங்களையும் உணர்ந்தவர்கள் எனக் கொள்ள முடியாது. குறிப்பாக, சமுதாயத்தில் அழுத்தப்பட்ட பிரிவினரின் எழுச்சிகள் சமுதாயத்தில் பெருகிவருகின்ற இக்காலத்தில் பெண் என்பவள் தன்னை அதாவது தனது இருப்பை உணர்ந்தவள் என்ற பொருள், முன்பு உணரப்படாமல் இருந்தது: அதன் முக்கியத்துவம் பலகால் அறியப்படாமல் இருந்தது: தன்னுடைய திறமைக்கும் தகுதிக்கும் தேவைக்கும் ஏற்ப அவளால் ஒரு நிலைப்பாடு எடுக்க முடியாத ஒரு நிலைமை இருந்தது / இருக்கிறது. இந்நிலை இன்று விரைவாக மாறிவருகிறது. பெண் தன்னை உணர்ந்ததுடன் தன் இருப்பை உணர்த்தவும் தொடங்கிவிட்டாள் என்பதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

**கலைச்சொற்கள்:**

தாழ் - தாழ்ப்பாள், அவகாசம் - உரிமை, சம்பாஷி - உரையாட்டு, திருப்தி - நிறைவு, விசுவாசம் - நன்றியுணர்வு, ட்யூப் லைட் - குழாய் வடிவ ஒளிரும் விளக்கு

**முன்னுரை:**

பெண்ணியம் பலவகையான சிந்தனைப் போக்குகளையும் செயல்பாடுகளையும் கொண்டது. ஆணோடான பாலியல் உறவினையும், கணவனையும், கருவறையையும், பிள்ளை வளர்ச்சியையும், குடும்ப அமைப்பையும் மறுப்பது என்பது ஒருவகை. குடும்பத்தையும் பிற உறவுகளையும் ஏற்றுக்கொண்டாலும் உரிய இடம், உரிய பங்கு, உரிய மரியாதை முதலியவற்றைக் கேட்பது என்பது ஒரு நிலை. தனது உடல்

பற்றிய பிரக்ஞையும் தனது மொழி பற்றிய பிரக்ஞையும் கொண்டிருப்பது அல்லது வெளிப்படுத்துவது என்பது இன்னொரு முக்கியமான நிலையாகும். சமூக, அரசியல் தளங்களில் அதிகாரப் பகிர்வுகளைக் கேட்பது அல்லது எடுத்துக்கொள்வது மற்றும் உலகநாடுகளில் பெண்கள் உள்ளிட்ட பொதுவான அவலங்களையும் அபாயங்களையும் களைய முற்படுவதும் முக்கியமான செயல்பாட்டு வடிவங்களாகக் காணப்படுகின்றன.

பெண்ணியம் என்ற கலகக்குரல் மனித இனத்தின் சரிபாதியான பெண்களுக்குச் சமுதாயத்தில் உரிய இடம் கொடுக்கப்படவில்லை என்பதைக் கண்டறிந்து, தங்கள் நிலையை உணராதிருந்த பெண்களுக்கு விழிப்புணர்வை ஊட்டியது. இதனால் பெண்கள் தங்கள் தாழ்நிலையை உணர்ந்து அதிலிருந்து விடுபடுவதற்குப் போராடத் தொடங்கினர். பலகாலமாக ஆண்களுக்கிணையான உரிமை வேண்டுமென்று பெண்கள் குரல் கொடுத்து வருகின்றனர். இவ்வுரிமைக்குரலே "பெண்ணியச் சிந்தனை" தோற்றம் கொள்ளக் காரணமானது என்பதை இக்கட்டுரை வாயிலாகக் காணலாம்.

**பெண்ணியம் குறித்து அறிஞர்கள் கருத்து**

'பெண்ணியம்" என்னும் குரல் அது வழங்கப்படும் இடத்திற்கும் காலத்திற்கும் பெண்களின் பிரச்சனைகளுக்கும் ஏற்ப வெவ்வேறு பொருளைத் தருவதாக அமைந்துள்ளது. பிரிட்டானியா கலைக்களஞ்சியம்,

"பெண்களின் உரிமைக்காலப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும் அதோடு பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் சமுதாய, அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையிலும் அவள் ஆண்களுக்குச் சமமானவள் எனும் உயர் நெறியை நிலைநாட்டும் நோக்கத்தைக் கருவாக்கொண்டு இயங்குகிறது"[1]

என்று பெண்ணியத்திற்கு விளக்கமளிக்கின்றது.

சார்லட்பன்ச் (Chrlotte Bunch) என்ற பெண்ணியவாதி, "பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன்மூலம் உலக அளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இது பெண்களுக்கான உரிமைகளைக் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்"[2] என்றுரைக்கின்றார்.

ரேஸ்டான்சி (Ray Stancy) என்பவர் பெண்ணியத்தின் மையச் செயல்பாடு சமுதாயத்தில் பெண்கள் நிலையை மாற்றுவது என்கிறார்.

இதுபோன்றே ரோசலிண்ட் டெல்மார் (Rosalint Delmar) என்பவர், “பெண்ணியம் பெண்களின் நிலையை மாற்றுகின்ற இயக்கம் (A Movement for change in the position of women)”[3] என்று கருத்துரைக்கின்றார். தெரசா ப்ளிங்டன் (Teresa Billingten), ‘இது உலகத்தையே மாற்றியமைக்கும் இயக்கம்’ என்கிறார்.

கார்டன் (Garden)என்பவர், “பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்”[4] எனவும் பார்பரா ஸ்மித் (Barbara Smith) என்ற பெண்ணியலார்,

“பெண்ணியம் என்பது எல்லாப் பெண்களையும் அரசியல் மற்றும் பிற அடிமைத்தளத்திலிருந்து விடுவித்தல் என்ற கொள்கை உடையதாகும். இளம் பெண்கள், தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், ஏழைப்பெண்கள், தன்பால் சேர்க்கையுடைய பெண்கள், வயதான மூதாட்டிகள் மற்றும் பொருளாதார நிலையிலும் மரபு மணமுறையிலும் துன்புறும் பெண்கள் இவர்கள் அனைவருக்கும் விடுதலை பெற்றுத் தருவதே இதன் இலக்காகும்”.[5] என்று விரித்துரைக்கின்றார்.

இக்கருத்தையொட்டி புட்சர் என்பவர், “பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம்.”[6] என்று கருத்துரைக்கின்றார்.

பெண்மை ஆண்மைக்கு நிகரானது என்று அனைவரையும் ஏற்றுக்கொள்ள வைப்பதான் பெண்ணியம் என்று ஜெயின் குறிப்பிட்டுள்ளார். தெற்காசிய நாடுகள் மாநாட்டில் பெண்ணியம் என்பது, “பெண்கள் சமூகத்திலும் அலுவலகத்திலும் வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும் அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயற்படும் முயற்சிகளும்”[7] என்ற விளக்கம் முன்னிலைப்படுத்தப்பட்டது.

“பெண்கள் மீதான வரலாறு, மத, பொருளாதார, பண்பாட்டு

ரீதியான ஒடுக்குமுறையின் அகநிலை உண்மைகளை

ஆராய்வது, அதாவது பெண்கள்மீதான ஒடுக்குமுறையின்

பல்வேறு பரிமாணங்கள், அதற்கான தீர்வுகள், அதை

அடைவதற்கான வழிமுறைகள் இவற்றை ஆராய்வதாகும்."[8]

என்கிறார்.

மனித இனச் சமன்பாட்டை நாடுவதே பெண்ணியத்தின் குறிக்கோள் என்று எம்.ஏ.சுசீலா கருத்துரைக்கின்றார்.

பெண்ணியத்திற்கு ஆண்கள் எதிரி அல்ல, அதன் வளர்ச்சிக்கு அவர்களின் ஒத்துழைப்பு மிகத்தேவை என்பதை வெ.பத்மா, "பெண்ணியம் ஆண்பாலரை விலக்கும் தத்துவமன்று ஒட்டுமொத்த ஆணாதிக்கச் சட்டத்தை மாற்றுகின்ற பணியை மேற்கொண்டுள்ள பெண்ணியம் அதே பணியில் பிராயச்சித்த உணர்வோடு பங்கேற்கும் ஆண்களையும் உள்ளடக்க வேண்டிய தேவை உள்ளது."[9] என்று எடுத்துரைக்கின்றார். தீவிரவாதப் பெண்ணியவாதிகளைத் தவிர பிற பெண்ணியலாளர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்கின்றனர்.

அபர்ணா மகந்தா என்ற பெண்ணியலாளர் பெண்ணியம் என்பது தத்துவமும் வாழ்க்கை முறையுமாகும் என்கின்றார். "பெண்ணியம் பெண்கள் அனுபவிக்கும் எல்லாவிதமான அடக்கு முறைகளையும் எதிர்ப்பது மட்டுமன்றிப் பெண்களின் மேம்பாட்டிற்குரிய வழிமுறைகளையும் செயற்படுத்துகிறது. இந்த அடக்குமுறைகள் பெண்ணினத்திற்குப் பொதுவாக இருப்பதால் இந்நிலை மாறப் பெண்களே பாடுபட வேண்டும்."[10] என்று பெண்ணியத்திற்கு விளக்கமளித்ததுடன் அதன் செயல்பாடு குறித்தும் பெண்கள் நிலை உயர்வதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைக்கின்றார் டாக்டர் முத்துச் சிதம்பரம்.

கி.மாரியம்மாள் என்பவர், "பெண்கள் தங்கள் உரிமைகளை யாரிடமும் யாசித்துக் கேட்க வேண்டிய நிலையில் இல்லை தங்களுக்குள் உறைந்து கிடக்கும் அறிவுப்பூர்வமான சிந்தனைகளை வெளிக்கொணர்வது, சுய உரிமைகளைச் சுயவாயால் பேசுவது, சிந்திப்பதுதான் பெண்ணியம்."[11] என்பார். எனவே பெண்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்குத் தீவிரமாகச் செயல்பட வேண்டும், போராட வேண்டுமென்கிறார்.

பெண்ணியத்திற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டுள்ள போதும் அது வழங்கப்படும் இடத்திற்கும், காலத்திற்கும், பெண்களின் பிரச்சனைகளுக்கும் ஏற்ப மாறுபடும் தன்மையுடையது. பெண்ணியம் குறித்து மேலே கூறப்பட்டுள்ள விளக்கங்கள் அனைத்தும் பாலியல் சமத்துவத்தையும் (Sexual Equality) சமூக மாற்றத்தையும் முதன்மைப்படுத்தினாலும் பெண்களது அனைத்துப்

பிரச்சனைகளையும் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றை நீக்க முயல்வதுடன், அவர்களின் அறிவார்ந்த செயல்பாடுகளை ஊக்குவித்து அனைத்துத் துறையிலும் பெண்களை ஈடுபடுத்தி முன்னேற்றுவதே பெண்ணியமாகும்.

**தமிழ்ப் பெண்கவிஞர்கள் காட்டும் பெண்களின் நிலை**

வீட்டிற்குள் பெண்ணை அடக்கிவைத்தல், பெண்களுக்குக் கருத்துக்களை வெளியிட உரிமையில்லை, அடங்கிவாழ்தல், குடும்பத்தில் சுமை, வரதட்சணைக் கொடுமை, பாலியல் அடிமை, சுயமின்மை, கல்வி கற்க உரிமை இன்மை, வேலைப்பளு, திருமண வாழ்க்கை, விதவைநிலை, ஒருதலைப்பட்சமான கற்புகோட்பாடு, பெண் குழந்தையை வெறுத்தல், பெண்ணைக் காட்சிப் பொருளாகப் பார்த்தல் போன்ற நிலைகளில் பெண்கள் அடிமைகளாக இருந்து வருகிறார்கள். இக்கருத்தைத் தமிழ்ப் பெண்கவிஞர்களின் கவிதைகள், தவறாமல் பதிவாக்கியுள்ளன.

**பெண்ணின் குறுகிய வட்டம்**

அடிமைத்தளைகளை உடைத்தெறிந்து வெளியில் வருவதற்கான வாய்ப்புகள் இன்றித் தவித்துக்கொண்டிருக்கும் பெண்ணின் நிலையை உள்ளே ஒரு வாவில் என்ற கவிதையில் வைகைச்செல்வி பதிவாக்கியுள்ளார்.

“தாழ் திறக்கும் என்றால் தான்
காத்திருத்தல் சுகம்
இல்லையெனில்
மரண அவஸ்தை” (அம்மி – ப.21)

‘துக்கங்கள்’ என்ற தேன்மொழியின் கவிதை தனிமையில் வீட்டினுள் அடங்கிக் கிடக்கும் பெண்களின் அவஸ்தையை வெளிப்படுத்துகின்றது. பெண் தன்னிலை மறந்து தூங்குமூஞ்சிப் பூவைப்போல் வீட்டில் உலவிக்கொண்டிருக்கும் நிலையைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

“தூங்கு மூஞ்சி பூவாய்
அணைந்துகொண்டே யிருக்கிறது என்
அறையில் ஒரு மெழுகுவர்த்தி” (அநாதிகாலம் - ப.70)

சுதந்திரப் பறவைகளாக ஆண்கள் சுற்றித்திரியும்போது கூண்டுக் கிளிகளைப்போல் அடைபட்டுக் கிடக்கும் பெண்களின் நிலையை 'என்ன செய்ய' என்கிற கவிதையில் தன்மொழி விளக்குகின்றார்.

**உரிமையின்மை**

கருத்துரிமையின்மை: எழுத்துரிமையின்மை, கல்விகற்க உரிமையின்மை, எனப் பெண்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளையும் பெண்கவிஞர்கள் தம் கவிதைப் பொருளாகக் கொண்டு கவிதைப் படைத்துள்ளனர்.

**கருத்துரிமையின்மை**

காலங்காலமாகப் பெண்களின் அடிமைநிலை நிலைத்திறந்ததோடு, தங்கள் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பும் இல்லாமல் இருந்தனர். சுதந்திரமாகச் சுற்றித்திரியும் ஆண்கள், பெண்களின் இருப்பு பற்றி எப்பொழுதுமே நினைத்ததில்லை. "மனக்குறிப்பு" என்ற தேன்மொழியின் கவிதை வரிகள் இதைத் தெளிவாக்குகின்றன.

"அவகாசங்களில்

என்னை வெளிப்படுத்த

எங்கே விட்டிருக்கிறாய்

மான் தின்ற மலைப்பாம்பு

மரம் சுற்றி நெளிவது மாதிரி

என் உணர்வுகளை

எனக்குள்ளேயே

சடசடக்க விடுகிறேன்

படபடக்கிற உன் சிறகின்

எல்லா ஓசையும்

எனக்குத் தெரியும்

உன்னால்

எந்த ஒலிநாடாவிலும்

பதிவு பண்ண முடியாது

என் கேவல்களை" (அநாதி காலம் - ப.13)

பெண்கள் தங்கள் உரிமைகளை உணர்ந்து கொள்ளவும் உணர்வுகளை வெளிப்படுத்தவும் தயங்கிக் கொண்டிருந்தார்கள். தற்பொழுது இந்நிலை மாறி வருகின்றது. தங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றும், தங்கள் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்றும் பெண்கள் விரும்புகின்றனர்.

"உனது புரிதல்களும் போதாமைகளும்" எனும் கவிதையில் தயங்கிய மனதுடன் தன்னைப் புரிந்துகொள்ள உனது மனம் தயாராக இருக்கின்றதா? – என்று தன் கணவனிடம் வேண்டிக்கொள்ளும் ஒரு பெண்ணின் மன நிலையை பதிவாக்கியுள்ளார் சல்மா.

"உனக்கு மறுப்பிலையெனில்

சிதறும் என் உணர்வுகளின்

சிறு துகளொன்றை

நீ உணரத் தருவேன்

மின்சாரக் கம்பத்துடன்

சம்பாஷிக்கும்

ஒற்றைப் பறவையின்

நம்பிக்கையோடு"

(ஒரு மாலையும் இன்னொரு மாலையும் - ப.59)

**எழுத்துரிமையின்மை**

எத்தனைத் தலைமுறை கண்டாலும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை முற்றிலுமாக மாற்றுதல் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. இந்நிலையில் பெண்கள் கவிதை எழுத முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகவே அமைந்துள்ளது. பல இன்னல்கள் இடையூறுகளுக்கு இடையிலும் அதனை எதிர்த்துக் கவிதை எழுதிவருகிறார்கள் என்பதைச் சுகிர்தராணி தெளிவாக்குகிறார்.

"பொட்டக் கழுதைக்கு

எழுத்தென்ன கிடக்கு

அப்பாவின் சலிப்புக்குப் பின்னும்

ஏது உன் தேடல்

மனசின் கேள்விக்குப் பின்னும்

இன்னமும்

எழுதிக் கொண்டிருக்கிறேன்”

“முடிந்தால்

என் அம்மாவிடம் நானிழந்த

எழுதுகோலை

எரிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்”

என என் எழுதுகோலை எரித்துவிட்டாலும் பரவாயில்லை, நான் எழுதிக்கொண்டேதான் இருப்பேன் என்ற ஆவேசக் குரலை சுகிர்தராணியின் கவிதையில் காணமுடிகின்றது.

**கல்வி கற்க உரிமையின்மை**

பெண்களின் கல்வியும் கற்பனையும் அநாவசியமானதாகவும் அசிங்கமானதாகவும் தெரிகிறது ஆண்களுக்கு. ஆனால் அவர்களில் பணிவும் அடக்கமும் மட்டும் திருப்தி தருவதாகவும் அழகானதாகவும் இருக்கிறது. பெண்களின் அடிமை வாழ்க்கையை மட்டும் விரும்பும் ஆண்களின் மனநிலையைப் பதிவாக்கியுள்ளார் சுகந்தி சுப்பிரமணியன்:

“இவள் கல்வி

அவர்களுக்கு அநாவசியமானது

நிறுத்திவிட்டாள்

இவள் கற்பனைகள்

அவர்களுக்கு அசிங்கமாகத் தோன்றின

கனவு காண்பதை நிறுத்திவிட்டாள்

இவளது பணிவு

அவர்களுக்கு திருப்தி தந்தது

அவள் உடைந்து போனாள்" *(மீண்டெழுதலின் ரகசியம் - ப.37)*

**அடங்கி வாழ்தல்**

ஆண்கள் எத்தனைப் பெண்களுடன் வேண்டுமானாலும் தவறான உறவு வைத்துக்கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கு மனைவியாக இருக்கக்கூடியவள் பத்தினியாகவே வீட்டினுள் அடங்கி வாழவேண்டும் என்பது ஆண்களின் ஒருதலைப்பட்சக் கருத்தாக இருந்து வருகின்றது. பத்தினித் தெய்வமென்று போற்றப்படும் கண்ணகி வாழ்க்கையே இன்றும் பெண்களுக்குத் தொடர்ந்து வருகின்றது. மனைவியிடம் வேறொரு பெண்ணை விரும்பிச் செல்வதாகக் கூறும் ஆண்கள் கொஞ்சம்கூடக் கூச்சம் கொள்வதில்லை. பத்மாவதி தாயுமானவனின் கவிதைவரிகள் இதனை நாசுக்காக வெளிப்படுத்தியுள்ளன.

"கண்ணே கண்ணகி

கதவைச் சாத்திக் கொள்

கவனமாயிரு

மாதவி வீடு வரை

போய் வந்து விடுகிறேன்" *(மறுபடியும் - ப.22)*

எனப் பிறன்மனையைத் தேடிச் செல்லும் ஈனச்செயலைப் பகிரங்கமாக மனைவியிடம் சொல்லிச் செல்லும் கணவன்மார்களின் நிலையை அம்பலமாக்குகிறார்.

**சுயத்தை இழத்தல்**

மனவலியையும் ஏமாற்றங்களையும் சந்தித்தாலும் மணவாழ்வைத் தொடர்ந்தாக வேண்டும் என்பதற்கான கட்டாயத்தை ஏற்படுத்துவது தாலி. புனிதமாகக் கருதிவரும் தாலியைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு கண்மூடித்தனமாக வாழ்ந்து கொண்டிருக்கும் அபலைப் பெண்களின் கண்களைத் திறக்கும் முகமாக வத்ஸலாவின் 'இழப்புகள்' என்ற கவிதை அமைந்துள்ளது.

"எனக்குள் இருந்த என்னையோ

காணவே காணோம்

எஞ்சியிருப்பது

அது மனதில் கனன்றெரியும் தழலும்

நீ இல்லாத சமயங்களில்

குற்ற உணர்வின்றி

கட்டிலின் மேல் நான் கழற்றிவைக்கும்

நீ கட்டிய தாலியும்தான்." (சுயம் - ப.30)

சுயத்தை இழந்து சுதந்திரமின்றி வாழும் நிலையே பெண்ணின் வாழ்நாள் முழுவதும் நீடித்துவருகின்றது. தனக்கென்று எதையும் செய்யாமல் பிறருக்காவும் பிறருடைய விருப்பத்திற்கிணங்கவும் வாழ்கிறாள் என்றாலும் தன் சுயத்தை வெளிப்படுத்துவதற்காக வாய்ப்பு வருமென்று நம்பிக்கையோடு இருக்கிறாள். கனிமொழியின் கவிதை வரிகள் இந்நிலையைத் தெளிவாக்குகின்றன.

**திருமணம்**

திருமணப்பந்தலில் மனைவியாக இணையப்போகும் பெண்ணின் விருப்பு வெறுப்புகள் பின் தள்ளப்படுகின்றன. ஆனால் மணமோ அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, அக்னி சாட்சியாக, கெட்டிமேளத்துடன் நடைபெறுகின்றது. இந்நிலையை 'அக்னி சாட்சி' என்ற கவிதையில் வத்ஸலா அழகாகப் பதிவாக்கியுள்ளார்.

"முகமற்ற 'நாலு' பேருக்கு முதலிடம்

மணம் நடத்துவோருக்கு இடண்டாமிடம்

மணமக்களுக்கு கடைசி இடம்

என, கெட்டிமேளத்துடன் பறைசாற்றப்படும்

பெருத்த பொய்யிற்கு

கோடானு கோடி முறை

அந்த அக்னி சாட்சி." (சுயம் - ப.14)

மணமாகிச் செல்லும் பெண்ணிற்கு வசந்தம் வாய்க்கப்பெறுவதில்லை. சுதந்திரக்காற்றை சுவாசிக்க முடிவதில்லை. வெண்ணிலாவின் கவிதை வரிகள்

மணமாகிச் செல்லும் பெண்ணிடம் வசந்தம் விடை பெற்றுக்கொள்வதைத் தெளிவாக்குகின்றன.

**வரதட்சணை**

மணமான பெண்கள் தங்கள் முகவரியை மறந்து கணவன் வீட்டின் முகவரியை உருவாக்க உழைக்க வேண்டும். புகுந்த வீட்டில் கண்ணிருந்தும் குருடாக, காதிருந்தும் செவிடாக, வாயிருந்தும் ஊமையாக வாழவேண்டிய கட்டாயநிலை ஏற்படுகின்றது. மணமாகி மனைபுகும்போது கைநிறையத் தங்கமும், பணமும், பொருளும் கொண்டு செல்லவேண்டும். என்றாலும் கடுகளவு ஓய்வின்றி உழைக்கவேண்டும். 'தீர்வு' என்ற வத்ஸலாவின் கவிதை வரிகள் தீர்வில்லாமல் அடிமைகளாக வாழும் பெண்களின் நிலையைப் பதிவாகியுள்ளன.

"அதிகம் இல்லை பெண்ணே!

சிறிதளவு தங்கமும் வெள்ளியும்

வசதிக்கேற்ப வாகனமும்

குடித்தனம் நடத்த பாத்திரங்களும்

ஆயுசுக்கும் விசுவாசமும் உழைப்பும்

அவன் பசிகளுக்குணவும் தந்து

நீ

குருடாய் செவிடாய் ஊமையாய்

முடமாய்

மூடமாய்

நின்றால் போதும்." (சுயம் - ப.32)

பட்டம் பெற்ற பெண்கள் பதவியில் பணிபுரிந்து சாதனை படைப்பதற்கு முன்பாக மணமாகிக் கணவன் வீடு செல்கின்றனர். சுமையலறை சென்ற பிறகுதான் அடுப்பில் எரிவது விறகு மட்டுமல்ல தங்களுடைய உரிமையும் சேர்ந்துதான் எரிந்து கொண்டிருக்கின்றது என்பதை உணர்கிறார்கள். லட்சத்தைக் கொடுத்து லட்சியமாக வாழலாம் என்று நினைத்துப் புகுந்த வீடு செல்லும் பெண்ணிற்கு, தன் உயிரும் உடலும் பாதுகாப்பின்றிப் போவது மணத்திற்குப் பிறகுதான் என்பதைப்

புரிந்துகொள்ளத் தாமதமாகிறது. அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, அக்னி சாட்சியாகக் கட்டப்பட்ட தாலிக்கயிறு, பெரியோர்களையும் அக்னியையும் சாட்சியாக வைத்துக் கட்டப்பட்ட கொலைக்கயிறு என்பதைப் புரிந்து கொள்ள முடியவதில்லை.

**வேலைப்பளு**

அழுக்குத் துணிகளின் நடுவில் அமர்ந்துகொண்டு துவைத்து, தேய்த்து, துடைத்து முடிப்பதற்குள் பகல் பொழுது காணாமல் போய்விடுகிறது. வேலைப்பளுவின் காரணமாகக் கணவன் முகத்தை இருளில் மட்டுமே பார்க்கமுடிகிறது. இவர்களின் இருப்பு பற்றிய கவலையின்றி எப்பொழுதும் படித்துக் கொண்டிருக்கிறான் கணவன். இதனை வெண்ணிலாவின் கவிதை வரிகள் சிறப்பாகச் சுட்டிக்காட்டுகின்றன.

“இரவு

கட்டில் இருட்டில் பார்த்துதான்

உன்முகம்

கையில் இருக்கும் புத்தகம் விட்டு

எழுந்து வந்து பார்த்துப் போயேன்

என்னை.” (நீரிலலையும் முகம் - ப.14)

ஓய்வு இல்லாமலும் கூலி வாங்காமலும் ஆயுட்காலம் முழுவதும் அடிமைகளாக இருந்து உழைக்கும் வர்க்கம்தான் பெண்கள். மாதவம் செய்து மாதாய்ப் பிறந்திருக்கிறாள். திரு இல்லாத திருநிறை செல்வி. உள்ளம் முழுவதும் அச்சத்தால் நிறைந்திருக்கும். ஆனால் துர்கைதேவி மேடையில் அரைகுறை ஆடையுடன் வலம் வந்தாலும், இழுத்துப் போர்த்திக் கொள்ளும் குடும்பப் பெண் என்பதால் நான் ஆசைக்குத்தானே தவிர ஆஸ்திக் கல்ல – எனப் பெண்ணின் இயலாமையைக் கவிதையாக்கியுள்ளார் வத்ஸலா.

“நான்

குலந்தழைக்க வைப்பவள்

பெண் சிசு கொலையாளி

என் பெயர்

குத்துவிளக்கு மட்டுமல்ல

ட்யூப் லைட்டும்தான்

நான்

விடுப்பில்லாதவள்

ஓய்வு பெற முடியாதவள்," (சுயம் - ப.52)

குழந்தைத்தனம் மாறும் முன்பாகவே பெண்ணிற்குக் குழந்தை பிறந்துவிடுகிறது. மணச்சுமையும் மனச்சுமையும் இளமையிலேயே அவளை அழுத்துகின்றன. அன்பில்லா உறவுகளோடு அனுசரித்துச் செல்வதற்கு மிகவும் வருந்துகிறாள் எனப் பெண்ணின் மனச்சுமையைக் கவிஞர் உமாமகேஸ்வரி பதிவாக்கியுள்ளர்.

**முடிவுரை:**

பெண்ணை உடல் ரீதியாக மட்டுமே பார்ப்பது அவளது அங்க லாவண்யங்களைக் கொண்டே அவளை அளவிடுவது போன்ற நிலை சமூகத்தில் வேரூன்றிக் கிடக்கின்றது. உத்தியோகம் புருஷலட்சணம், பெண்ணுக்கு அழகு உடல் என்ற பார்வை அங்கீரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகப் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டுள்ளது. சிறுவயதிலிருந்தே பெண் தனது தோற்றத்தில் கவனம் செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டு வந்துள்ளமையைக் காணமுடிகின்றது. அழகு குறைவான பெண்களை, அவள் படிப்பில் மேன்மையுற்றிருந்தாலும், குறைத்து மதிப்பிடும் போக்கும் கண்கூடாகும். இது போன்ற பெண்ணின் உடலை முன்னிறுத்திக் கொண்டுள்ள கருத்தாக்கங்கள் ஏற்படுத்தும் சமூகக் கேடுகள் ஏராளம்.

இந்நிலை மாறுவதற்குக் கடந்த ஒரு நூற்றாண்டாகப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஆணுக்குப் பெண் சமமானவள். அறிவிலும் திறனிலும் அவர்களைவிட சளைத்தவளல்ல – போன்ற கருத்தை உணர்த்தி நிலை நிறுத்தத் தேவைப்பட்ட முயற்சிகள் கொஞ்சநஞ்சமல்ல, பாரதி தொடங்கி ஆக்கபூர்வமான இலக்கியங்கள் உடல் ரீதியாகப் பெண்களை அணுகும் மனோபவத்தை மாற்ற முயன்றுள்ளனர். பெரியார் போன்ற சமூக சிந்தனையாளர்கள் இந்த இலட்சியத்தை நோக்கித் தமிழர்களை வழிநடத்திச்செல்ல தங்கள் வாழ்வை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

நீண்ட காலப் போராட்டத்திற்குப் பிறகு சமீப காலமாகத்தான் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் தங்கள் அறிவாற்றலை வெளிப்படுத்தி, பதவியும் அதிகாரமும்

பெறத் துவங்கி இருப்பதைப் பார்க்க முடிகின்றது, என்றாலும் இவை ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றன. இவற்றைப் பேணிப் பாதுகாக் வேண்டிய கட்டாய நிலையுள்ளது. இது மனோபாவமாக மட்டுமே நின்றுவிடாமல் ஒரு கலாச்சாரமாகத் தழைக்கச் செய்யவேண்டிய கடமை அனைவரிடமும் உள்ளது.

**அடிக்குறிப்புகள்:**

1. சித்துசாலமன், பெண்ணியம் போட்ட பதியங்கள், ப.10.
2. மேலது, ப.13.
3. பிரேமா, இரா. பெண்ணியம், ப.14,
4. முத்துச் சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப.10.
5. பிரேமா, இரா, பெண்ணியம், ப.14.
6. சித்து சாலமன், பெண்ணியம் போட்ட பதியங்கள், ப.14.
7. சுசீலா, எம்.ஏ. பெண் இலக்கியம் வாசிப்பு, ப.24.
8. பிரேமா, இரா. பெண்ணிய அணுகுமுறைகள், ப.19.
9. மேலும் (இதழ்), டிசம்பர் – 1993, ப.33.
10. முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப.111.
11. மேலது ப.172.

**துணை நூற்பட்டியல்:**


1. சித்துசாலமன், பெண்ணியம் போட்ட பதியங்கள், கங்கை புத்க நிலையம், சென்னை, முதல் பதிப்பு, 2010.
2. முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்புத்தகாலயம், சென்னை, முதல் பதிப்பு, 1997.
3. பிரேமா, பெண்ணியம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, முதல் பதிப்பு, 1994.
4. சுசிலா, எம்.ஏ., பெண் இலக்கியம் வாசிப்பு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதல் பதிப்பு, 2001.